
www.tamilarangam.net




# தை



THENE

January 1989

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேனீக்கு ஒரு மலர்ச்செண்டு

தேனீ என்ற சொல்லில் ஒரு இனிமையிருக்கின்றது, கடமையிருக்கின்றது, கடுமையும் இருக்கின்றது. இயற்கை தந்த தேனை சுவைக்க, சேர்த்து வைக்கும் தேனீ இனிமையானது. காட்டிலும் மேட்டிலும், காலையிலும் மாலையிலும் மலரும் பூக்களின் தேனையெல்லாம் சேர்த்து, சற்றும் பிசகேற்படாது கூட்டு வாழ்க்கையை நடத்தும் தேனீயிடம் கடமையிருக்கின்றது. தனது இனத்திற்கு, தனது வாழ்க்கை முறைக்கு பங்கம் ஏற்பட்டால் அது தன் கடுமையைக் காட்டத்தவறுவதில்லை:

இந்த இலக்கிய முயற்சியை முன்னெடுக்கும் இளைஞர்களும் இந்த இனிமை, கடமை, கடுமை என்ற வரம்புகளுக்குள் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை.

தேனீ மக்களுக்குப் பயனுள்ள கருத்துக்களை சேகரித்து, இலகுவானதும் இனிமையானதுமான தமிழில் தரவேண்டும்.

எழுத்தாளன் கடந்தகால வரலாற்றில் மக்களுக்குப் பாடம் படிப்பிப்பவன்.

நிகழ்காலத்தைப் படம் பிடித்துக்காட்டி உண்மையை உணர்த்துபவன்.

வருங்கால சமுதாயமாற்றத்திற்கான முன்னறிவிப்பாளன்

தேனீக்களுக்கும் இந்தக் கடமையுண்டு.

அதே நேரத்தில், 'பாதகம் செய்பவரைக் கண்டால் மோதிமிதித்துவிடு பாப்பா" என்ற பாரதியின் பாடலையும் அவர்கள் மறந்துவிடக் கூடாது. இதுதான் நாம் அவர்களிடம் எதிர்பார்க்கும்கடுமை.

ஆரத்தில் கேட்ட தேனீயின் ரீங்காரத்தில் உருவான சொல்வடிவந்தான் இது.

தேனீக்கு எனது வாழ்த்துக்கள்.

— வசந்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரீங்காரம்

அன்பானவர்களுக்கு தேனீயின் அன்பான வணக்கங்கள்.

புதியவர்களான நாம் "தேனீக்களாக உங்கள் முன் வருகின்றோம். எம்மிடம் கைவசமாக அதிகமாக ஒன்றுமில்லைதான். உங்களுக்கும் எங்களுக்குமிடையில் இடம் பெறப்போகும் தொடர்ச்சியான சந்திப்புக்களின் மூலம் தேனையும் மகரந்தத்தையும் சேர்த்து...., ஒரு இலக்கியக் "கூட்டை" அமைக்க விரும்புகின்றோம்.

செய்திகள் உண்மையானவையாக இருக்கவேண்டும், அது புனிதமானது.

அபிப்பிராயம் சுதந்திரமாகத் தெரிவிக்கப்பட வேண்டும். அதைக் காப்பாற்றுவதுதான் பத்திரிகைகளின் கடமை. இந்த அடிப்படைக் கோட்பாட்டை மனதில் நிறுத்திக்கொண்டுதான் நாம் உங்களை எம்முடன் ரீங்காரமிட அழைக்கின்றோம். உங்கள் ஆக்கங்களுடனும் விமர்சனங்களுடனும் தேனீயின் நகர்வுகள் தொடரும்.......

இலக்கியம் என்று பேசப்படும் மட்டங்களில், அரசியல் கலக்காத இலக்கியம் உருவாகவேண்டும் என்று போலித்தனமான வாதங்கள் எழுப்பப்படுகின்றன. மனிதன் ஒரு அரசியல் மிருகம். அவனின் சகல நடவடிக்கைகளிலும் அரசியல் கலந்திருக்கின்றது. இமயமலையின் உச்சியில் தவம் செய்துகொண்டிருக்கும் யோகிக்கு அரசியல் அவசியமில்லாமல் இருக்கலாம், ஆனால் அவன் கீழே வந்து ஒரு பிரயாண வண்டியில் ஏறும் பொழுது...... அந்த வண்டி யாருக்குச் சொந்தம் ? வண்டிக்காரனுக்குக் கூலி எவ்வளவு ? வண்டிப்பாதையைச் செப்பனிடுவது யார்? யோகியின் பிரயாணத்தில் அரசியல் கலந்துவிடுகிறது.

இன்று "அரசியல் கலக்காத பத்திரிகைகள்" என்று சொல்லப்படும் பல பத்திரிகைகளை நாம் பார்க்கின்றோம். குறிப்பிட்ட நலன்களைக்காக்கும் வக்கிரமமான அரசியலை அவை மிகக் கௌரவமாகவே செய்கின்றன. அம்புலிமாமாவிலிருந்து குமுதம் வரை இந்த அரசியல் கலக்காத அரசியலை செய்யத்தவறவில்லை. பிஞ்சிலிருந்து பெரியோர்வரை இந்த அரசியல் ஊட்டப்படுகின்றது, வளர்க்கப்படுகின்றது.

எமது இலக்கியம் 'கினியப்பெற்றா'க்களை நீராட்டும் பாலாக அமையாமல்; நம் கிராமத்துப் பெண்களின் கிழிந்த அடைகளை தைக்கும் ஊசியாக அமைய வேண்டுமென்பதுதான் எமது விருப்பம்.

- தேனீக்கள் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஏக்கம்



தேய்ந்து போன முழுமதி
மீண்டும் வரும்
இது இயற்கை
ஆடு மேய்ந்த வாழை மரம்
நாளை வளரும்
நமது நம்பிக்கை
நாட்டில் அற்றுப்போன மானிடம்
மீண்டும் வரும் எப்போது
என்பது எம் ஏக்கம்.

ஓண்டு

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கானல் வரி

மறுபடியும்
எல்லோரும் வந்தாயிற்று.
மாமா, சித்தப்பா,
மணியக்கா,
அண்ணுந்து சாய்ந்தபடி,
அப்பா கதிரைக்குள்.

சுருட்டு புகை கிளப்பும்
மார்பு மயிர்க் காட்டில்
மேய்கிற விரல்கள்.

மறுபடியும்,
காணி உறுதிகள்,
கூறைச் சேலையுடன்
உறங்கி, உறங்கி,
அதற்கும் தொற்றிய,
நப்தலீன் வாசனை.

சரசா! எனது அருமைச் சரசா!!

நீ என்ன செய்வாய்?
அவர்களோ உள்ளே
உனது விலைக்குப் பேரம் பேசுவர்.

மகிழம்பூ சிந்தியிருக்கும்
தண்ணீர் ஊற்றவும்
பாலாய் நெளிகிற நிலவில்
இரவு.
குந்தியிருப்பாய் கிணற்றுக் கட்டில்
கண்களை மூடி, கற்களை எறிந்து.
குருட்டுச் சாத்திரம்
பார்த்தபடியே.

'இம் முறையேனும்...'

காத்திரு.
உனக்காய் இவர்களனைவரும்
கொண்டு வருவார்;
ஏழு குதிரைகள் பூட்டிய தேரில்
பொன்னிற இறகுகள்
தலையில் மினுங்கும்
'தூய க்ஷத்திரியனை'

பார்த்திரு.
உனது கூந்தல் வெளுத்த
பின்பும் கூட.

—சேரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போராட்டம், ஒரு நோக்கு

- ஆதவன்

ஈழப்போராட்டத்தின் கடந்த கால நிகழ்வுகள் மாபெரும் படிப்பினைகளை நமக்கு நல்கிறது. போராட்டம் என்றால் என்ன? அதன் வடிவம் என்ன என்பதில் தவறான கருத்துக்களை கொண்டிருந்தவர்கள் இன்று தமது நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டு வருகின்றார்கள். போராட்டம் என்றால் இதுதான் என்று அடம் பிடித்தவர்கள், வெறும் விதண்டா வாதங்களில் ஈடுபட்டு எல்லோரையும் குழப்பியவர்கள், மாக்சியத்தை கொச்சைப்படுத்தியவர்கள் எல்லாம் இன்று மௌனமாகி விட்டார்கள். எமக்கு இந்தியா உதவவேண்டும் என்று ஆரம்பம் முதலே கத்தித் திரிந்தவர்கள் இன்று இந்தியா துரோகி, சந்தர்ப்பவாதிகள் என்று புலம்பிக் கொண்டிருக்கின்றார்கள்..

கடந்த ஆறு வருடங்களில் எமது போராட்டம் மூலம் நாம் கண்ட அனுபவங்கள், உண்மைகள், அவற்றாலான விளைவுகள் என்ன என்பதை நாம் ஆராயவேண்டும். முதலில் போராட்டம் யாரால் ஆரம்பிக்கப் பட்டது என்பதை தெரிந்து கொள்ளவேண்டும். தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து சிறிலங்கா இனவாத அரசுகள் பல் வேறு துறைகளிலும் ஒடுக்குமுறைகளை முகம் கொடுத்து வருகின்றார்கள். குடியேற்றம், வேலைவாய்ப்பு, அபிவிருத்தி, கல்வி என்று இவற்றை நீட்டிக்கொண்டு போகலாம். ஆனால் அரசின் அடக்குமுறையில் ஆரம்பத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் பாட்டாளிகள் என்பதை யாவரும் அறிவர். குடியேற்றத்தினால் கிழக்கு மாகாண மக்கள் பாதிக்கப்பட்ட போதும், பத்துலட்சம் மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டபோதும், சுருட்டுத் தொழிலாளர்களினதும், அரசாங்கத்தமிழ் எழுதுவினைஞர்களின் வினைப்பாடும் பாதிக்கப்பட்டபோதும் ஈழப்போராட்டம் ஆரம்பிக்கவில்லை. ஆனால் ஒரு இனத்தின் நடுத்தர வர்க்கம் அடக்குமுறையினால் நேரடியாகப் பாதிக்கப்படும் போது அது இந்த அடக்குமுறைக்கு எதிராக குரலெழுப்பும் என்பது நியதி. இதுபோல்தான் யாழ்ப்பாண நடுத்தர வர்க்க இளைஞர்களும், மாணவர்களும் தரப்படுத்தலாலும், வேலைவாய்ப்பின்றியும், உயர்கல்வியின்றியும் பாதிக்கப் பட்டபோது எதிர்த்துக் குரலெழுப்பிய போதுதான் பிரிவினைக் கோசம் பிறந்தது.

நடுத்தர வர்க்கத்தினரின் நலன்களில் உயிர் வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் அரசியல்வாதிகள் பண்ணாகத்தில் ஒன்று சேர்ந்து தமிழ்க்கோரிக்கையை இளைஞர்களின் பிரிவினைக்கோசத்தைக் கொண்டு உருவாக்கினார்கள். இதுதான் 77ம் ஆண்டு தேர்தலில் கூட்டணியினரின் தேர்தல் பிரச்சாரமாக அமைந்தது. மேடைக்கு மேடை வாய் கிழியக் கத்தி தமது வாக்குகளை சேர்த்துக் கொண்டார்கள். தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்ற விடுதலைக் கூட்டணியினர் அடுத்த சில ஆண்டுகளில் தமிழ்க்கோரிக்கையை கைவிட்டு விட்டார்கள். இவர்களது இயலாமையும், சந்தர்ப்பவாதத்தையும் கண்டு இவர்கள் மீது நம்பிக்கை இழந்த குடாநாட்டு நடுத்தர வர்க்க இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை அறிமுகப்படுத்தினர்.

ஆயுதப்போராட்டம் என்றால் என்ன என்பதை அறியாதவர்களான இவர்கள் முன்பு அது பற்றி அனுபவம் எதும் பெற்றிருக்காத நிலையில் ஆயுதப்போராட்டத்தை தீர்வாக முன்வைத்தனர்.. எடுத்த எடுப்பிலேயே வங்கிக் கொள்ளைகள், சமூகவிரோதிகள் அழிப்பு, பொலிஸார்மீது தாக்குதல் என்று ஈடுபட்ட இயக்கங்கள், சாதி, மத, பிரதேச ரீதியாக பிரிந்து நிற்கும் மக்களை அரசியல்மயப்படுத்த வேண்டும் என்பதை மறந்துவிட்டார்கள். இதனால் எமது போராட்டம் முழு

---

கேனி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாதங்களை கணக்கில் கொள்ளவில்லை. தவறான விளக்கங்களும், கருத்துக்களும் போராட்டசித்தாந்தங்களாக மக்களிடையே பரப்பப்பட்டன. இயக்கங்களுக்கு கூடுதலாக ஆட்சேர்க்க வேண்டும் என்பதற்காகவும், மக்களிடையே பிரபல்யமாக வேண்டும் என்பதற்காக அரச படைகள் மீது அர்த்தமற்ற தாக்குதல்கள் நடைபெற்றன. இயக்கக் கவர்ச்சிகளில் இழுபட்டு இயக்கங்களில் அணிதிரண்டவர்கள் தமது சொந்த நலன்களுக்காக இயக்கங்களை பயன்படுத்தியது மட்டுமல்லாது, குழுவாதங்களை உருவாக்கி தம்மிடையே முரண்பாடுகளை மோதல்களாக வளர்த்து கொண்டார்கள்.

இயக்கங்களின் ராணுவம் மீதான தாக்குதல்கள் அதிகரித்தும், அதன் விளைவுகள் விபரீதமாக அமைந்தது, தங்கள் நலன்களை போராட்டத்தில் தியாகம் செய்யமுடியாத குடாநாட்டு தமிழ் பேசும் நடுத்தர வர்க்கத்தினர் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்தனர். பெரும்பாலும் தமது பாதுகாப்பு கருதியும், தமது வசதிகளுக்காகவும், கல்வியெனும் இவர்கள் போராட்டத்திலிருந்து தாங்களாகவே அந்நியப்பட்டு போனார்கள். சொந்த மண்ணில் தமது நலன்கள் பாதிக்கப்பட்ட போது பிரிவினை வேண்டும் என்று கூக்குரலிட்டவர்கள், போராட்டத்தில் அவற்றை தியாகம் செய்ய முடியாதவர்களாக ஈழத்திலிருந்து வெளியேறினார்கள்.

இப்படி இடம் பெயர்ந்த தமிழர்களின் நிதியுதவியாலும், இந்தியாவின் உதவியாலும் வீங்கிப்பெருகிய இயக்கங்கள் நாளடைவில் தமிழ் மக்களின் தலைமைக்கான போட்டியில் ஒன்றையொன்று அழிக்கத் தொடங்கின. இந்தியாவின் தாற்பரியத்தை விளங்கிக் கொள்ளாமல், இந்திய உதவியை எதிர்பார்த்து தங்களை வளர்த்துக் கொண்டவர்கள் நாளடைவில் இந்தியாவின் திட்டத்திற்கு பலியாகிப் போனார்கள். இந்தியா தனது ஆதிக்கத்தை ஈழப்போராட்டத்தில் படிப்படியாக செலுத்திக் கொண்டது. இதன் பின் விடுதலைப்போராட்டம் டில்லி, திம்பு, பெங்களூர், சென்னை, கொழும்பு என்று இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை யென்று அலைந்து திரிந்தது.

இதற்கிடையில் இயக்கங்கள் ஒன்றையொன்று அழித்தொழிப்பது வேகமாக நடைபெற்றது. ஈழத்தின் பல பாகங்களிலும் போராளிகள் ஒருவரையொருவர் தேடியழிக்கப்பட்டனர். மனித நாகரிகம் தலை குனியுமளவிற்கு கொலைகள் நடைபெற்றன. இயக்கங்களின் பிளவால் அவதியுற்ற மக்கள் மத்தியிலிருந்து ஒற்றுமைக்கான கூக்குரல்கள் கிளம்பின, இயக்கங்களே ஒன்றுபடுங்கள் என்று கோசங்களைக் கிளப்பியவர்கள் ஒற்றுமை எப்படி சாத்தியமாகும் என்பதை உணரவில்லை. குழிப்பறிப்புகள், பதவிப்போட்டிகள், என்று முரண்பட்டுக் கொண்டிருந்தவர்கள், போராட்டம் என்றால் தாங்கள் நடத்துவதுதான் என்றிருந்தவர்கள், சிறு முரண்பாடுகளுக்காக சகபோராளிகளை கொன்றொழித்தவர்கள், மக்களில் நம்பிக்கையற்றிருந்தவர்கள் எப்படி ஒன்றுபடமுடியும். ஒரு சில இயக்கங்கள் ஒற்றுமையை தங்களுக்கிடையில் ஏற்படுத்திக் கொண்டபோதும் அது நீடித்து நிலைக்கவில்லை. ஒற்றுமை, ஒற்றுமை என்று கூக்குரலிட்டவர்கள் ஒன்றுபட்டவர்களை வளர்க்க முற்படவில்லை.

இயக்கங்களின் முரண்பாடுகள் மோசமாக வெடித்துக் கொண்டிருந்தபோது, ஸ்ரீலங்கா ராணுவம் தனது அராஜகங்களையும், அழித்தொழிப்பு நடவடிக்கைகளையும் தரை, ஆகாய, கடல்மூலமாக செயற்படுத்திக்கொண்டிருந்தது. மக்களோ நாளுக்கு நாள் சொந்த மண்ணில் சகலவற்றையும் இழந்து அகதிகளாக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இயக்கங்களின் போராட்டத்தில் நம்பிக்கையிழந்து போனார்கள். விரக்தியும் வேதனையும் அவர்களை போராட்டத்தை வெறுக்க வைத்ததுடன் அமைதி வேண்டும் என்று அங்கலாய்க்க தொடங்கினார்கள். புராண இதிகாசங்களில் அதி மனித வீரப்பிரதாபங்களை படித்தும், சினிமாவில் பார்த்தும் தங்களுக்குள் ஒரு மாயை ஏற்படுத்தி வாழ்ந்த எமது மக்கள் அதே கண்ணோட்டத்தில் இயக்கங்களை பார்த்து நம்பிக்கை வைத்தவர்கள் நாளடைவில் இந்தியா வரவேண்டும் என்று எதிர்பார்த்து இருந்தார்கள். மக்களில் நம்பிக்கையற்று தங்களில் நம்பிக்கை கொண்டவர்கள் போராட்டத்தை சீரழித்துக் கொண்டவர்கள். விடுதலைப்போ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராட்டத்தில் தாங்கள்தான் என்று ஏகபோக உரிமை கொண்டாடியவர்கள் இறுதியில் தங்களால் தனித்து போராட முடியாது போனபோது இந்தியாவின் வரவை எதிர்பார்த்தார்கள்.

தனக்கு ஒரு சாதகமான நிலையை எதிர்பார்த்து இலங்கைக்குள் நுழையக் காத்திருந்த இந்தியா சோற்றுப் பார்சலுடன் தனது திட்டத்தை நிறைவேற்றத் தொடங்கியது. முதலில் சிறிலங்கா அரசுடன் இணைந்து இந்தியா ஒப்பந்தத்தை உருவாக்கியது. இதில் ஈழவிடுதலை அமைப்புக்களையோ, அல்லது தமிழ் மக்களின் அபிப்பிராயத்தையோ கணக்கில் எடுக்காமல் தமது இஷ்டப்படி இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுத்தப்பட்டது. இந்த ஒப்ந்தம் தமிழ் பேசும் மக்களின் பிரசினைக்கு தீர்வாக அமையா விட்டாலும் அப்போதைய நிலையில் மக்கள் இதனை வரவேற்றார்கள். ஈழப்போராட்டத்தின் இயக்கங்களின் இழுபறி நிலைமைகளும், சிறிலங்கா ராணுவத்தின் அழித்தொழிப்பு நடவடிக்கைகளிலும் இருந்து தங்களுக்கு ஒரு அமைதி கிட்டும் என தமிழ் மக்கள் இந்திய ராணுவம் ஈழத்தில் வருகை தந்தபோது மாலை போட்டு வரவேற்றார்கள். ஆனால் இந்திய ராணுவம் தனது திட்டத்தின் முதல் வேலையாக ஆயுதத்தை ஒப்படைக்குமாறு சகல விடுதலை அமைப்புக்களையும் கேட்டுக்கொண்டது. ஈழவிடுதலைக்காக ஆயுதம் தாக்கியவர்கள், அந்நிய ராணுவம் ஒன்றின் வேண்டுகோளுக்கிணங்கி, ஒப்பந்தத்தை ஏற்று ஆயுத ஒப்படைப்பில் இறங்கினார்கள்.

தமிழ் மக்களின் போராட்டத்தில், அவர்கள் மீது இரங்கி இந்தியா முதலாளித்துவ அரசு உதவிக்கு வரவில்லை. தமது இலங்கை மீதான பாதுகாப்பு திட்டங்கள் இலங்கை அரசின் வெளிநாட்டுக் கொள்கைகளால் தமக்கு ஏற்படும் பாதிப்புக்களை தடுக்கும் நோக்குடன், தமிழ் நாட்டில் எழுந்த தேசியவாதத்தை எமது போராட்டத்தின் ஊடாக தணிக்கலாம் என்று கருதியும் ஈழப்போராட்டத்தில் தனது உதவிகளையும், மறைமுக ஆதரவையும் கொடுத்து வந்தது.

தனது சாதகமான நிலை உருவானதும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தினூடாக தனது ஆதிக்கத்தை இலங்கையில் செலுத்திக் கொண்டது. போராட்டத்தில் சரியாக இந்தியாவை புரிந்து கொள்ளாது அதன் உதவிகளை பெற்றுக் கொண்டு, பின்னர் தமது நலன்களுக்காக இந்தியாவை பகைத்துக் கொண்டு இன்று தங்களை அழித்து கொண்டு இருக்கிறார்கள். தனக்கு எதிரான இயக்கங்களை அழித்தும், ஏனையவர்களை தனக்கு கட்டுப்பட வைத்தும் தனது அரசியல் சதுரங்கத்தை நடாத்திக் கொண்டு இருக்கிறது. எது எப்படியோ விடுதலைப்போராட்டத்தில் இருந்த சாதகமான நிலைமைகளை கணக்கில் கொள்ளாமல், அதன் தந்திரஉபாயங்களை புரிந்து கொள்ளாமல் இன்று விடுதலைப் போராட்டத்தை சரியாக முன்னெடுக்கத் தெரியாமல், முட்டி மோதி கடைசியில் இந்திய ராணுவத்திடம் ஒப்படைத்து பழையபடி தேர்தல் வரைக்கும் கொண்டு வந்து விட்டுள்ளார்கள்.

பழையபடி தமிழர் விடுதலைக் கூட்டணியினர், இயக்கங்களுடன் இணைந்து தேர்தலில் குதித்துள்ளார்கள். ஆயுதப்போராட்டம் கைவிடப்பட்டு பழைய பல்லவி மீண்டும் இசைக்கத் தொடங்கியுள்ளது. மீண்டும் தேர்தலில் நிற்போருக்கு எச்சரிக்கையும், பயமுறுத்தலும் விடப்பட்டுள்ளது ஒரிருவர் சுட்டுக் கொல்லப்பட்டும் உள்ளார்கள். போராட்டம் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ளாமல் இன்னும் சடுகுடு விளையாடிக்கொண்டிருந்தால் மக்கள் இவர்களை முற்றாக மறந்து விடுவார்கள் என்பதை உணரவில்லை. வரலாறு எப்போதும் முன்னோக்கித்தான் நகரும். அதற்கு பின்னோக்கி நகரும் சக்தி கிடையாது. இதை உணராது வரலாற்றை பின்னோக்கி இழுப்பவர்கள் வரலாற்றுக் குப்பைத் தொட்டியில் வீசப்பட்டதாகத்தான் சரித்திரம் உண்டு. தமிழ் பேசும் மக்கள் தமது எதிர்காலத்தை தாமே தீர்மானிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

---

தேனீ.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெஞ்சு பொறுக்குதில்லையே...

( நெஞ்சு பொறுக்குதில்லையே... என்ற இந்தப் பகுதிக்கு "ஊர்க்குருவி" தனது நெஞ்சில் உள்ளதையெல்லாம் வெளியில் "கொட்டி"யிருக்கிறார். அவை அவரின் சொந்தக் கருத்துக்கள். நீங்களும் உங்கள் நெஞ்சுக்குப் பொறுக்காதவைகளை இந்தப் பகுதிக்கு எழுதியனுப்பலாம் - தேனீக்கள். )

வடதுருவத்தில் வாழும் பறக்கும் வாத்துக்கள் குளிர்காலத்தில் வெப்பப்பிரதேசங்களான இந்தியா இலங்கை போன்ற நாடுகளுக்கு வந்தாலும், கோடைகாலத்தில் தாயகம் திரும்பிவிடும்... ஆனால்....

ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் தாங்கள் தற்போது வசிக்கும் நாட்டையே தமது நிரந்தரமான வாழ்விடமென நினைக்கின்றார்கள். குறிப்பாக மேற்கு ஜேர்மனியில் வாழும் தமிழர்கள் தாமாகவே ஒரு கனவுலகத்தை உருவாக்கிக் கொண்டு வாழ்கின்றார்கள். இங்கு வாழும் பலர் தமக்கு ஒரு சொந்த நாடு இருக்கின்றது என்பதையே நினைத்துப்பார்க்க விரும்புவதில்லை. தாம் இங்கு தொடர்ந்து வாழப் போவதாகவும் தமது பிள்ளைகள் இங்கேயே தொடர்ந்து இருக்கப் போகின்றார்கள் எனவும் கனவு காண்கின்றார்கள். தமது பிள்ளைகள் ஜேர்மன் மொழியையும் பழக்கவழக்கங்களையும் கற்றுக்கொள்ள வேண்டுமென விரும்புகின்றார்கள். பிள்ளைகளின் மனதிலேயே இவர்கள் ஒரு மாயையை உருவாக்குகின்றனர். பல பிள்ளைகளுக்குத் தமது சொந்தநாடு இலங்கை என்பதே தெரிவதில்லை. பெற்றோர்களும் பிள்ளைகளுக்குச் சொல்வதில்லை. அந்தப்பிள்ளைகள் ஒருநாள் தமது சொந்த நாட்டிற்குச் செல்லும் பொழுது ஒரு அன்னியநாட்டிற்கு வந்துவிட்ட உணர்வையே பெறுவார்கள்.

இவர்கள் தமது நாட்டைப்பற்றிப்பேசும் பொழுது தாழ்வாகவே பேசுவார்கள். நமது நாட்டில் இன்றும் எத்தனை ஆயிரம் மக்கள் துன்பங்களை அனுபவித்துக்கொண்டு வாழ்ந்துவருகின்றார்கள் என்பதை இவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அங்கு எத்தனை மக்கள் இறக்கின்றார்களோ அந்த அளவிற்கு தாம் இங்கு தொடர்ந்து வாழமுடியும் என இவர்கள் எண்ணுகின்றார்கள். ஒப்பந்தங்களோ அல்லது தேர்தல்களோ அங்கு எந்த அடிப்படையில் நடைபெறுகின்றது, யாருடைய மக்கள் இதில் பங்கு கொள்ளுகின்றார்கள், யார் நன்மை பெறுகின்றார்கள் என்றெல்லாம் அவர்கள் சிந்திப்பதில்லை. தாம் ஜேர்மனியைவிட்டு வெளியேறவேண்டி வருமோ என்ற அடிப்படையிலேயே அவர

www.tamilarangam.net

கள் சிந்திக்கின்றார்கள்.

தமது நாட்டில் அரசபயங்கரவாதம் உச்சக்கட்டத்தையடைந்திருந்த போது எந்தவித எதிர்ப்புநடவடிக்கைகளிலும் பங்கெடுக்காத பலர் "திருப்பி அனுப்புவதற்கு" எதிரான நடவடிக்கைகளில் மும்மரமாக ஈடுபடுகின்றனர். பலருக்கு தமது அரசியல் தஞ்சவிண்ணப்பம் எழுதிய போதுதான் (அதுவும் பலர் தாம் சுயமாக எழுதியது கிடையாது) நாட்டுப் பிரச்சனைபற்றி அக்கறையிருந்தது. அதன் பின்பு தமக்கு அரசியலில் அக்கறையில்லை என்பவர்களும், அரசியல் பேசுபவர்களைக் கண்டு ஒதுங்குபவர்களுமாகத்தான் இருப்பார்கள். ஆனால் "அடித்துக் கொண்டிருக்கும்" இயக்கத்திற்கு பணம் கொடுப்பதில் தயக்கம் காட்டமாட்டார்கள். இவங்களாலைதானே நாங்கள் இங்கே இருக்க முடிகின்றது என்பதுதான் இவர்கள் வாதம்.

ஜேர்மன் உள்நாட்டமைச்சர் தமிழர்களைத் திருப்பி அனுப்பப் போகின்றோம் என்று அறிக்கை விட்டால் உடனடியாக இவர்களுக்கு தமது நாட்டில் அன்பப்படுபவர்கள் "ஞாபகம்" வந்து விடுகின்றது. கண்ணீரும் கம்பலையுமாக பத்திரிகை நறுக்குகளுடன் சட்டத்தரணிகளிடம் ஓடுகின்றார்கள். அவர்கள் சொல்லும் ஆறுதல் வார்த்தைகளை துண்டுப்பிரசுரங்களாக உலாவவிட்டு தம்மை ஆறுதல்படுத்திக் கொள்ளுகின்றார்கள்.

நம் நாட்டில் நடக்கும் பிரச்சனைகளில் நமக்கும் பங்குண்டு. நாம் தூரத்துப் பார்வையாளர்களாக மட்டுமிருக்க முடியாது. நாம் ஒரு நாள் சொந்த நாட்டிற்குச் செல்லத்தான் வேண்டுமென்பதை மறந்துவிடக்கூடாது.

**ஊர்க்குழவி**

---

அன்பின் வாசகர்களே,

உங்களிடமிருந்து கதை, கட்டுரை, கவிதை, விமர்சனங்கள் யாவற்றையும் தேனீ எதிர்பார்க்கின்றது. தேனீயில் இடம்பெறும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்ககாரர்களே பொறுப்பாளிகள். உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி"

THENEE
Schul Str. 17
7016 Gerlingen
West - Germany

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# செய்திகள்

## தேர்தல் மாவட்டங்களும் எம்.பி.க்களின் எண்ணிக்கையும

(நமது நிருபர்)

இருபத்திரண்டு தேர்தல் மாவட்டங்களின் பெயர்களும், ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலிருந்தும் தெரிவாகவிருக்கும் எம்.பி.க்களின் எண்ணிக்கையும் வருமாறு:-

| | |
|---|---|
| கொழும்பு: | 20 |
| கம்பஹா: | 17 |
| களுத்துறை: | 1 |
| மஹநுவர: | 12 |
| மாத்தளை: | 05 |
| நுவரெலியா: | 06 |
| காலி: | 11 |
| மாத்தறை: | 09 |
| அம்பாந்தோட்டை: | 07 |
| யாழ்ப்பாணம்: | 11 |
| வன்னி: | 05 |
| மட்டக்களப்பு: | 05 |
| திகாமடுல்ல: | 06 |
| திருகோணமலை: | 04 |
| குருநாகல: | 1 |
| புத்தளம்: | 07 |
| அனுராதபுரம்: | 08 |
| பொலன்னறுவை: | 05 |
| பதுளை: | 08 |
| மொனறாகலை: | 05 |
| இரத்தினபுரி: | 10 |
| கேகாலை: | 09 |
| மொத்தம்: | 196. |

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள ஐந்து மாவட்டங்களிலிருந்தும் மொத்தம் முப்பத்தொரு எம்.பி.க்கள் தெரிவாவார்கள்.

## ஈரோஸ் சுயேட்சைக்குழுவை நிறுத்துகிறது

மண்டூர்,

பொதுத் தேர்தலில் ஈரோஸ் இயக்கம் சுயேச்சையாக போட்டியிடவிருக்கிறது.

"பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற அபிப்பிராயங்களின் அடிப்படையிலேயே நாம் கட்சி சார்பற்ற முறையில் வடக்கு-கிழக்கில் தேர்தலில் ஈடுபடுவதென தீர்மானித்தோம். மக்களின் ஏகோபித்த குரலாக ஒலிக்கக்கூடிய தலைமைத்துவத்தை உருவாக்குவதற்காகவே எமது இயக்கத் தோழர்களை வேட்பாளர்களாக நாம் தெரிவு செய்யவில்லை.

பொதுமக்கள் மத்தியிலிருந்தே வேட்பாளர்களை நிறுத்தி தேர்தலில் ஆதரவு வழங்கவிருக்கிறோம்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## டெலோ இயக்கம் 9 வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது

(நமது நிருபர்)

வடக்கு - கிழக்கிலுள்ள தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடுவதற்காக தமிழர் விடுதலை கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.), ஈழதேசிய ஜனநாயக முன்னணி (ஈ.என்.டி.எல்.எப்.) ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து ஏற்படுத்தியுள்ள கூட்டமைப்பின் ஒன்பது வேட்பாளர்களை தமிழ்ஈழ விடுதலை இயக்கம் நிறுத்தியுள்ளது.

## வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு மத்திய அரசு ஒன்றரைக் கோடி ரூபா ஒதுக்கீடு!

### சர்வதேச உதவியாக 52 கோடி டாலர்கள் கிடைக்கவுள்ளதாக முதல்வர் பெருமாள் தகவல்

www.tamilarangam.net

# இந்த பாராளுமன்றத்

## தேர்தலில் வாக்களிப்பது எப்படி?

## வாக்காளர் தெரிந்துகொள்ள வேண்டியநடைமுறை

(நமது நிருபர்)

அடுத்த பாராளுமன்றத்துக்கான 225 உறுப்பினர்களில் 196 உறுப்பினர்கள் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வாக்களிப்பு மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஏனைய 29 பேரும் தேசிய ரீதியில் கட்சிகள் பெறும் மொத்த வாக்கு விகிதாசாரத்தில் தெரிவாவார்கள்.

22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து மாவட்ட அடிப்படையிலேயே இந்த உறுப்பினர்கள் விகிதாசார வாக்களிப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விகிதாசார வாக்களிப்பு முறை மூலம் பாராளுமன்ற எம். பிக்களை தெரிவுசெய்யும் முறை இதுவே முதற் தடவையாகும். கடந்த மாகாண சபைத் தேர்தலில் இந்த முறை அறிமுகமானாலும் அதில் பெரும்பாலான மக்கள் பங்கேற்காததால் அது பற்றி அவர்கட்கு தெரிந்துகொள்ளும்வாய்ப்பு கிடைக்கவில்லை.

22 தேர்தல் மாவட்டங்களிலும் உள்ள வாக்காளர்கள் இந்த தேர்தலில் எப்படி வாக்களிக்க வேண்டும்.

இந்த விகிதாசாரத் தேர்தல் முறையில் ஒரு வாக்காளர் தாம் விரும்பும் ஒரு கட்சிக்கு அல்லது ஒரு சுயேச்சை குழுவுக்கு முதலில் வாக்களிக்க வேண்டும்.

பின்னர், தாம் விரும்பிய அக்கட்சியின் அல்லது சுயேச்சை குழுவின் சார்பில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களை இனங்கண்டு அவர்களுக்கு தரப்பட்டுள்ள இலக்கங்களுக்கு மேலே புள்ளடியிட வேண்டும்.

மூன்று பேருக்கு மேல் வாக்களிக்க கூடாது. ஒன்று அல்லது இரண்டு பேருக்கு வாக்களித்து விட்டு மூன்றாவதை வாக்களிக்காமல் விடலாம்.

வாக்களிப்பு எப்படி என்பதை யாழ். தேர்தல் மாவட்டத்தை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வோம்.

இந்த மாவட்டத்திலிருந்து தெரிவாகும் எம். பிக்களின் எண்ணிக்கை 11 ஆகும்.

இங்கே ஐந்து கட்சிகள் போட்டியிடுகின்றதாக வைத்துக் கொள்வோம். இந்த ஐந்து கட்சிகளும் தலா 14 வேட்பாளர்களை போட்டிக்கு நிறுத்தியுள்ளன.

எனவே அந்த மாவட்ட வாக்குச்சீட்டில் மேற்புறத்தில் மும்மொழிகளிலும் போட்டியிடும் ஐந்து கட்சிகளின் பெயர்களும் அவற்றின் சின்னங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

அதற்கு கீழே 14 வேட்பாளர்களுக்குரிய இலக்கங்கள் அச்சிடப்பட்டிருக்கும்.

வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்லமுன்னர் தாம் விரும்பும் கட்சியினுடைய வேட்பாளர்களின் இலக்கங்களை தெரிந்து கொள்ள வேண்டும்.

வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச்சீட்டை பெற்றதும் முதலில் வாக்குச்சீட்டில் தாம் விரும்பும் கட்சிச் சின்னத்துக்கு நேரே உள்ள அடைப்புக்குறிக்குள் புள்ளடி போட வேண்டும்.

பின்னர் அக்கட்சியில் போட்டியிடும் தமது ஒன்று அல்லது மூன்று விருப்புக்குரிய வேட்பாளரின் இலக்கத்தின்மீது தனித்தனியே புள்ளடி இட வேண்டும்.

மூன்றுக்கு மேற்பட்ட இலக்கங்களுக்கு புள்ளடியிடக்கூடாது. தம் விருப்பப்படி ஒருவருக்கு மட்டும் வாக்களித்துவிட்டு மற்ற இரண்டு வாக்குகளையும் பயன்படுத்தாமலும் விடலாம்.

அந்த மாவட்டத்தில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும்பெறும் வாக்குகளை கணிக்கவே இந்த விருப்பத் தெரிவு நடைபெறுகிறது.

இந்த மாவட்டத்தில் ஒவ்வொரு கட்சியும் பெறும் வாக்குகளே முதலில் எண்ணப்படும். பின்னரே வேட்பாளர்களின் விருப்பு வாக்குகள் கணக்கெடுக்கப்படும்.

இந்த தேர்தல் மாவட்டத்தில் கட்சிகள் பெறும் மொத்த வாக்குகளை கணக்கெடுத்துஎல்லாக் கட்சிகளுக்கும் அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்கோடு தெரிவுபெறுவதற்கு உறுப்பினர் ஒருவர் பெறவேண்டிய குறைந்தபட்ச வாக்குகளை விகிதாசார அடிப்படையில் கணக்கெடுத்தே உறுப்பினர்கள் 11 பேரும் தெரிவு செய்யப்படுவார்கள்.

## வேட்புமனு

(எஸ்.என். பிள்ளை)

பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர் மனுத் தாக்கலுக்கான கால அவகாசம் இன்று நண்பகலுடன் முடிவடைகிறது. பெரும்பாலும் இத்தேர்தலில் எல்லா தேர்தல் மாவட்டங்களிலும் பலத்த போட்டியிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுத்தேர்தல் அடுத்த மாதம் பெப்ரவரி 15ஆம் திகதி நடக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய சோஷலிஸ முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், எக்ஷத் லங்கா ஜனதா பக்ஷய.

வடக்கு—கிழக்கில் தமிழர்விடுதலைக்கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய அரசியல் கட்சிகளிடையே பலத்த போட்டிக்கு வாய்ப்புண்டு. இக்கட்சிகள் தத்தம் சார்பாக அதிக ஸ்தானங்களைப் பெற முனைப்புடன் வாக்கு வேட்டையில் இறங்கியுள்ளன. ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) சுயேச்சைக் குழுவொன்றுக்கு தங்கள் சார்பாக இன்று இறுதி நேரத்தில் வேட்பமனுக்களை தாக்கல் செய்யக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டணியுடன் ஈ. பி. ஆர். எல். எப். டெலோ, ஈ. என். டீ. எல் எப். என்பன இணைந்து போட்டியிடுகின்றன.

அனைத்து கச்சேரிகளு[illegible] பலத்த பாதுகாப்புக்கு உ[illegible]ளாக்கப்பட்டிருக்கிறது. வி[illegible]கினமில்லாமல் வேட்பாள[illegible]கள் தங்கள் மனுக்க[illegible] தாக்கல் செய்வதை உறுதி[illegible]படுத்தவே இப்பாதுகாட[illegible] எனச் சொல்லப்பட்ட[illegible] ஆனால், எத்தகைய அ[illegible]பாவிதங்களும் மனுத் த[illegible]கல் செய்யப்படும் போ[illegible] இடம்பெறவில்லை என தே[illegible]தல் திணைக்கள அதிகா[illegible] குறிப்பிட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## யாழ்ப்பாணத்தில்
# கூட்டணி, த காங்கிரஸ், ஐ தே க. மனுத்தாக்கல்

(யாழ்.அலுவலக நிருபர்)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கான 11பாரா ளுமன்ற ஆசனங்களுக் காக புதனன்று தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஐ. தே. க. ஆகியவற்றின் தலா 14 வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டன.

யாழ். தேர்தல் உதவி ஆணையாளர் திரு. அருந்த வச் செல்வம் வேட்பு மனுக் களை ஏற்றுக்கொண்டார்.

தமிழர் விடுதலைக் கூட் டணியின் தலைவர் எம். சிவ சிதம்பரம், செயலாளர் நாய கம் அ. அமிர்தலிங்கம், முன் னாள் யாழ். எம். பி. வி. யோகேஸ்வரன் ஆகியோர் இதற்காக யாழ். வந்திருந் தனர். தமிழர் விடுதலைக் கூட் டணி தலைமையில் ஈ. பி. ஆர். எல். எப்., ஈ. என். டி. எல். எப்., டெலோ ஆகியன வும் போட்டியிடுகின்றன.

த. வி. கூ. வேட்பாளர் விபரம் வருமாறு:

திருவாளர்கள்; எம். சிவ சிதம்பரம், வி. யோகேஸ் வரன், ஆர். கே. ரட்ணசிங் கம், எஸ். சேனாதிராசா, நீலன் திருச்செல்வம், வி. ஆனந்தசங்கரி, ஏ. என். ராஜேந்திரன், என். சிறி காந்தா (டெலோ), எம். அலோசியஸ் (டெலோ), ஜே. பிரேமச்சந்திரன் (ஈ. பி. ஆர். எல். எப்) கே. யோகசங்கரி (ஈ. பி. ஆர். எல். எப்.), கே. நவரட் ணம் (ஈ. பி. ஆர். எல். எப்), ஆர். மனோகரன் (ஈ. என். டி. எல். எப்.), கே. சிறினி வாசன் (ஈ. என். டி. எல். எப்).

தமிழ் காங்கிரஸின் வேட்பாளர் பட்டியல் வரு மாறு:

குமார் பொன்னம்பலம், மோதிலால்நேரு, அப்பாத் துரை, விநாயகமூர்த்தி, வி. இராசக்கோன், வி. ரட்ன ராசா, என். செல்லத்துரை, எல். ஏ. யோசப், முகமட் இசடீன், கே. கே. கனக ராசா, சதாநந்தன் மனோ ராஜ், என். குமரகுருபரன், எல். அல்போன்சஸ், கே. வி. மகேந்திரன், என். ரி. சிவ ஞானம்.

# முஸ்லிம் காங்கிரஸ் யாழ். மாவட்டத்திலும் போட்டி

(நமது நிருபர்)

யாழ்ப்பாண மாவட்டத் தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் செவ்வாய்க்கிழமை காலை 11-20 அளவில் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளது.

சட்டத்தரணி ஞானச் சந்திரன் குழுத் தலைவராக கொண்ட 11 வேட்பாளர் பட்டியலே தாக்கலாகியுள் ளது.

பட்டியலில் அப்துல் காதர், மார்சூக், ஆறுமுகம், பி. கந்தையா சிவஞான மூர்த்தி, ஜனாப ஏ. ஆர். எம். ஜவாஹிர், எம். ஏ. சமத், ஏ. எம். எம். ஜவாத், திரு. ஏ. சிவகுருநாதன் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

**நன்றி: வீரகேசரி.**

# சம்பிரதாயம்

மண விழா சென்றிருந்தேன்
மணி ஒலிக்க ஓமம் வளர்த்து
தாலிகட்டிக் கலியாணம்.
சேலைசுத்திய மரமதனை
வலம் வந்தனர் மணமக்கள்
அம்மி மிதித்து அருந்ததி பார்த்தனர்.
விண்ணில் ஒளிரும் அருந்ததியும்
கல்லாய்ப் போன அகலிகையும்
உடல் புண்ணாய்ப்போன இந்திரனும்
ஒரு மின்விளக்காய், செங்கல்லாய்
சேலைகட்டிய புற்செடியாய் மாறிவிட
ஜேர்மனியில் காப்பாற்றப்படுகிறது
ஒரு சம்பிரதாயம்.

— வண்டு.

# வாத்தியார்.

கண்ணகியின் பெருமை
கற்பித்த ஆசிரியர்
களைத்துப் போய்
கள்ளருந்தி
காணச் சென்றார்
மாதவியை.

— நவம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வெளிவந்து விட்டது!

பார்த்திபனின் இன்னுமொரு புதிய படைப்பு. சமுதாயத்தில் நமது பெண்களின் வாழ்க்கையில் நிறைந்து கொண்டிருக்கும் சீதனப் பிரச்சினையை முன்வைத்து எழுதப்பட்ட நாவல்.

ஆண்கள் விற்பனைக்கு நாவல் பெற்றுக் கொள்ள வேண்டிய முகவரி:

**SÜDASIEN BÜRO**
KIEFERN STR. 45
5600 WUPPERTAL - 2
Tel. 0202/507156

விலை 5 D.M

# தேனீ

இரண்டு மாதத்திற்கு ஒருமுறை தேனீ வெளி வருகிறது. இதனை தொடர்ச்சியாக பெற விரும்புபவர்கள் கீழ்வரும் முகவரிக்கு வங்கி மூலமாகவோ, தபால் மூலமாகவோ சந்தா பணத்தை அனுப்பி வைக்கலாம்.

சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

ஒரு வருடம் 15 டி.எம்.

பிற நாடுகளுக்கான சந்தா விபரம் அறிய கீழுள்ள தொடர்பு கொள்ளவும்

முகவரி:

G. kanagatharan
Schul Str. 17
7016 Gerlingen
West- Germany.

வங்கி கணக்கு இலக்கம். 7817998054
Landesgirokasse BLZ 60050101
7144 AsperG.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்